அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை: 30/2019

எனது இலக்கம்: EST-3/DICIP/06/0259

பொது நிருவாக, அனர்த்த முகாமைத்துவ மற்றும்
கால்நடை அபிவிருத்தி அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.

2019.09.30

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்

**<u>தாபன விதிக்கோவையின் II ஆம் வகுதியின் XLVIII ஆம் அத்தியாயத்தின்</u>**
**<u>*13:2, 21:2, 22:1:1* மற்றும் *14:12* உபபிரிவுகளைத் திருத்தியமைத்தல்</u>**

தாபன விதிக்கோவையின் II ஆம் வகுதியின் XLVIII ஆம் அத்தியாயத்தின் *13:2, 21:2, 22:1:1* மற்றும் *14:12* உபபிரிவுகளின் பால் தயவுடன் தங்களது கவனத்திற்கு கொண்டு வருகின்றேன்.

02. அவ் உபபிரிவுகள் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளை உள்ளடக்கிதாக திருத்தியமைப்பதற்கு *2019.08.27* ஆந் திகதியன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் போது தீர்மானம் எட்டப்பட்டது.

***I. தாபன விதிக்கோவையின் பாகம் II இன் XLVIII ஆம் அத்தியாயத்தின் 13:2 ஆம் உப பிரிவில் திருத்தம் செய்தல்***

*13:2 ஏதேனுமொரு துர்நடத்தை தொடர்பான நிகழ்வு பற்றி ஆரம்ப ஆரம்ப புலனாய்வொன்றை இரண்டு மாத காலத்தினுள் பூர்த்தி செய்ய வேண்டும் என்றும் விதிக்கும் அதே சந்தர்ப்பத்திலேயே ஆரம்ப புலனாய்வொன்றை நடத்துமாறு கட்டளை விடுக்கும் அதிகாரி ஒருவரினால் ஆரம்ப புலனாய்வு அலுவலருக்கோ அல்லது அலுவலர் குழுவிற்கோ கட்டாயமாக அறிவித்தல் வேண்டும். எவ்வாறாயினும், அதற்கு மேலதிக காலம் தேவையெனின், ஆரம்ப புலனாய்வு அலுவலருக்கோ அல்லது அலுவலர் குழுவினால் போதுமான அளவு ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்களைச் சமர்ப்பித்து உரிய அலுவலர்களின் அனுமதியைப் பெற வேண்டும். எவ்வாறாயினும், ஒவ்வொரு ஆரம்ப விசாரணையையும் தாமதமின்றி தொடர்புடைய ஒவ்வொரு தரப்பினரும் எப்போது கவனம் செலுத்துதல் வேண்டும்.*

***II தாபன விதிக்கோவையின் பாகம் II இன் XLVIII ஆம் அத்தியாயத்தின் 21:2 ஆம் உப பிரிவில் திருத்தம் செய்தல்***

*21:2 குற்றஞ்சாட்டப்பட்ட தரப்பு, ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்கள் தொடர்பில் முன்னறிவித்தலின்றி முறையான ஒழுக்காற்று விசாரணையின் கிட்டிய இரண்டு விசாரணை அமர்வுகளுக்கு சமுகமளிக்காதிருப்பின், குற்றஞ்சாட்டப்பட்ட அலுவலர் இல்லை எனக் கருதி மத்தியஸ்தர் சபையினால் விசாரணையை தொடர்ந்து நடாத்துதல் வேண்டும். அதற்கிணங்க, ஒரு தரப்பைக் கொண்டதாக நடாத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக மத்தியஸ்தர் சபையினால் குற்றஞ்சாட்டப்பட்ட அலுவலருக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும். ஒழுக்காற்று விசாரணை நடாத்துவதற்கு தீர்மானிக்கப்படும் அடுத்த தினத்தில் குற்றஞ்சாட்டப்பட்ட தரப்பு பங்கேற்பதற்குத் தவறுமிடத்து அத்தினத்திலிருந்து அடுத்து வரும் விசாரணைகளில் குற்றஞ்சாட்டப்பட்ட தரப்பு பங்கேற்றாலும், பங்கேற்காவிட்டாலும், ஒழுக்காற்று விசாரணையைத் தொடர்ச்சியாக முன்னெடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.*

***III. தாபன விதிக்கோவையின் பாகம் II இன் XLVIII ஆம் அத்தியாயத்தின் 22:1:1 ஆம் உப பிரிவில் திருத்தம் செய்தல்***

*22:1.1* எவரேனும் அலுவலரொருவரினால் செய்யப்பட்ட துர்நடத்தை தொடர்பில் வெளியிடப்பட்ட குற்றப்பத்திரத்துடன் தொடர்புடையதாக நடத்தப்படுகின்ற முறையான ஒழுக்காற்று விசாரணையை அந்த விசாரணை ஆரம்பித்து ஆறு மாத காலத்தினுள் பூர்த்தி

*செய்ய வேண்டும். அதற்கு மேலதிக காலம் அவசியமாயின் விசாரணை அலுவலரினால் போதுமானளவு ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்களைச் சமர்ப்பித்து ஒழுக்காற்று அதிகாரியின் அனுமதியைப் பெறுதல் வேண்டும். 31.11 உப பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு குற்றச்சாட்டாக இல்லாதவிடத்து, குற்றஞ்சாட்டப்பட்ட அலுவலரின் தாமதத்தினால் விசாரணை தாமதமடையும் சந்தர்ப்பத்தில் தவிர வேறு காரணங்களினால் ஆறு மாதங்களுக்கு மேல் தாமதமடையும் நிலையில் குற்றஞ்சாட்டப்பட்ட அலுவலர் சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்டிருப்பின், ஒழுக்காற்று விசாரணையில் குறிப்பிட்டுள்ள விடயங்களுக்கு உட்பட்ட வகையில் ஒழுக்காற்று அதிகாரியின் தற்றுணிபின் அடிப்படையில் குற்றஞ்சாட்டப்பட்ட அலுவலரை மீண்டும் சேவையில் இணைத்து சம்பளத்தைச் செலுத்த முடியும். அதுவரையில் செலுத்தப்படாத சம்பளங்கள் தொடர்பில் ஒழுக்காற்றுக் கட்டளை கிடைக்கப் பெற்றதன் பின்னர் அதில் குறிப்பிடப்பட்டுள்ள விதத்தில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.*

***IV.* தாபன விதிக்கோவையின் பாகம் *II* இன் *XLVIII* ஆம் அத்தியாயத்தின் *14:12* ஆம் உப பிரிவில் திருத்தம் செய்தல்**

*14:12:1 அவ்வாறிருந்தும், யாரேனும் ஒரு அரச அலுவலர் ஏதேனும் ஒரு பதவிக்குரியதாக பதவியுயர்த்தும் பரீட்சையொன்று அல்லது திணைக்களப் பரீட்சையொன்று அல்லது வினைத்திறன் காண் தடைப் பரீட்சையொன்றில் தோற்றுவதற்கு அவசியப்படும் சகல முன் தகைமைகளையும் பெற்றிருக்கும் போது பணித் தடையினை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு குறித்த பதவியுயர்த்தும் பரீட்சை அல்லது திணைக்களப் பரீட்சை அல்லது வினைத்திறன் காண் தடைப் பரீட்சையில் தோற்றுவதற்கு தகைமையற்றவராக மாட்டார்.*

ஒப்பம்./ ஜே.ஜே. ரத்னசிறி

செயலாளர்

பொது நிருவாக, அனர்த்த முகாமைத்துவ

மற்றும் கால்நடை அபிவிருத்தி அமைச்சு